பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 05 2024 7 15
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு 7வது மற்றும் இறுதிக்கட்டமாக வரும் சனிக்கிழமை வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

2. மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப்பொறுப்பேற்றால் ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

4. காஸா பகுதியில் எந்தவொரு போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையிலும் பங்கேற்க மாட்டோம் என்று ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

5. பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் ரோஹன் போபன்னா, யூகி பாம்ரி ஆகியோர் இன்று பங்கேற்கின்றனர்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

மக்களவைக்கு 7வது மற்றும் இறுதிக்கட்டமாக வரும் சனிக்கிழமை வாக்குப்பதிவு நடைபெற உள்ள 57 தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

இந்தத் தொகுதிகளில் நாளை மறுநாளுடன் பிரச்சாரம் முடிவுக்கு வருகிறது.

மக்களவைக்கான தேர்தல் கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, ஏழு கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

இதுவரை ஆறு கட்டத்தேர்தல்கள் முடிவடைந்துள்ளன.

ஏழாவது மற்றும் இறுதிக்கட்டத் தேர்தல் 8 மாநிலங்களில் அடங்கிய 57 தொகுதிகளில் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று மேற்குவங்க மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும், ஜார்கண்ட் மாநிலம் தும்கா விமான நிலைய மைதானத்திலும் நடைபெறும் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களில் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

பிஜேபி தலைவர் திரு. ஜே.பி. நட்டா, இன்று தியோகர் என்ற இடத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, இதேபகுதியில் நாளை மறுநாள் உரையாற்ற உள்ளார்.

இதற்கிடையே அடுத்த மாதம் 4-ஆம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கைக்கான முன்னேற்பாடுகள் குறித்து, தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமார் நேற்று காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

வாக்கு எண்ணிக்கையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், வாக்கு எண்ணும் மையங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<>>>>

விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அமித் ஷா கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் குஷி நகரில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத்தொகை முழுமையாக விடுவிக்கப்பட்டதாகவும், மூடப்பட்டிருந்த சர்க்கரை ஆலைகள் திறக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

இளையோர் நலனுக்கான ஐந்து உத்தரவாதங்கள் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாக அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

பீகாரில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பேற்றால் ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

மக்களவைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு ராகுல்காந்தி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவின் 'வசுதைவ குடும்பகம்' என்ற கருத்து, உலக சுகாதார கூட்டமைப்பின் 'அனைவருக்கும் சுகாதாரம் - சுகாதாரத்திற்காக அனைவரும்' என்ற கருப்பொருளுடன் ஒத்துப்போவதாக மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திரு. அபூர்வசந்திரா தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற இந்த கூட்டமைப்பு கூட்டத்தில் பேசிய அவர், உலகம் ஒரு குடும்பம் என்ற இந்தியாவின் நிலைப்பாடு, கொரோனா பெருந்தொற்று காலத்தில் பெரிதும் உதவியதாகக் கூறினார்.

பாரம்பரிய பொது சுகாதார அணுகுமுறை அனைவருக்கும் கிடைக்க வேண்டியதை உறுதி செய்வதுடன் அது குறித்த விழிப்புணர்வு தகவல்களை வழங்குவதன் மூலம் சிறந்த சுகாதார வழிமுறைகளை உருவாக்க முடியும் என்று திரு. அபூர்வசந்திரா கூறினார்.

<<<<>>>>

ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், தில்லி முதலமைச்சருமான திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தனது இடைக்கால ஜாமீனை மேலும் 7 நாட்கள் நீட்டிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது உடல்நல பிரச்சினைகளை கருத்தில்கொண்டு பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தி இருப்பதாகக் கூறினார்.

ஏனவே ஜாமீன் நீட்டிக்கப்பட்டால் ஒருவார காலத்திற்குள் அனைத்துப் பரிசோதனைகளையும் தாம் மேற்கொள்ள முடியும் என்று திரு. கெஜ்ரிவால் தெரிவித்தார்.

இதனிடையே ஜாமீன் நீட்டிப்பு கோரி திரு. கெஜ்ரிவால் மனுதாக்கல் செய்திருப்பதை பிஜேபி குறை கூறியுள்ளது.

மீண்டும் சிறை செல்வதில் இருந்து தவிர்க்கும் வகையில் அவர் இத்தகைய கோரிக்கையை வைத்திருப்பதாக அக்கட்சி கூறியுள்ளது.

<<<<>>>>

ஆயுஷ் சிகிச்சை முறைகள் அனைவருக்கும் எளிதாக கிடைப்பதை உறுதி செய்வதே அரசின் நோக்கம் என்று மத்திய ஆயுஷ் துறை செயலாளர் திரு. வைத்ய ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஆயுஷ் துறையும், அகில இந்திய ஆயுர்வேத கழகமும் இணைந்து நேற்று நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

ஆயுஷ் துறை வல்லுநனர்களுடன் இணைந்து காப்பீட்டு துறையினர் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆயுஷ் துறை உற்பத்திப் பொருட்கள் அதிகரித்திருப்பதன் மூலம் இந்தத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்திருப்பதுடன், ஆயுஷ் துறையின்கீழ் காப்பீடும் வழங்க திட்டமிட்டிருப்பது ஒரு மைல்கல் என்று திரு. வைத்ய ராஜேஷ் கூறினார்.

<<<<>>>>

காஸா பகுதியில் எந்தவொரு போர்நிறுத்தம் அல்லது பிணைக் கைதிகளை பரிமாறிக்கொள்வதற்கான ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தையில் பங்கேற்க மாட்டோம் என்று ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

அண்மையில் ரஃபா நகரில் இஸ்ரேல் நடத்திய ராணுவ தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஹமாஸ் அமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளது.

ரஃபா நகரில் சில தினங்களுக்கு முன்பு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 45 பாலஸ்தீனர்கள் உயிரிழந்ததாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் **Beirut** நகரில் செய்தியாளர்களிடம் பேசிய ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரி ஒசாமா ஹம்தன், மத்தியஸ்த தூதர்களிடம் அளிக்கப்பட்ட நிபந்தனைகளை பின்பற்றினால் மட்டுமே பிணைக் கைதிகளை விடுவிக்க முடியும் என்று கூறினார்.

நிரந்தர போர்நிறுத்தம் உள்ளிட்ட தங்களின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

யுக்ரைனுக்கு இந்த ஆண்டு ஒரு பில்லியன் யூரோ மதிப்பிலான ராணுவ உதவி வழங்குவதற்கான ஒப்பந்தம், அந்நாட்டு அதிபர் திரு. **Volodymyr Zelenskiy -** ஸ்பெயின் பிரதமர் திரு. **Pedro Sanchez** இடையே நேற்று கையெழுத்தானது.

தரையிலிருந்தும், விமானம் மற்றும் கப்பல்களில் இருந்தும் தாக்கக்கூடிய வகையிலான நவீன ரக ராணுவ உபகரணங்களை வாங்குவதற்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

இதற்கிடையே யுக்ரைனின் தெற்கு பகுதி மாகாணமான **Mykolaiv-**வில் ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர்.

இதற்கு பதிலடியாக யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ரஷ்ய பகுதியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

அமெரிக்காவின் டெக்சாஸ் உள்ளிட்ட மத்திய மாகாணங்களில் ஏற்பட்ட கடுமையான சூறாவளிக் காற்றில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெக்சாஸ், ஒக்லஹாமா, அர்கன்சாஸ், கெண்டகி ஆகிய மாகாணங்களில் வீசிய பலத்த சூறாவளிக் காற்றில் அவர்கள் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோசமான வானிலை மற்றும் சூறாவளிக் காற்றால் கிழக்கு கடற்கரையோர பகுதிகளைச் சேர்ந்த 12 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதனிடையே ஆஃப்கனிஸ்தானில் **Baghlan, Badakhshan** மாகாணங்களில் அண்மையில் ஏற்பட்ட மழை, வெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 16ஆக அதிகரித்துள்ளது.

500க்கும் மேற்பட்ட வீடுகள் முழுவதுமாக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் ஒருசில இடங்களில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

வெப்பநிலையைப் பொறுத்தவரை அடுத்த 3 நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இயல்பைவிட கூடுதலாக இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குனர் திரு **Mrutyunjay Mohapatra** கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் ரோஹன் போபன்னா, யூகி பாம்ரி ஆகியோர் இன்று பங்கேற்க உள்ளனர்.

பாரீசில் நடைபெறும் இப்போட்டியில் ரோஹன் போபன்னா – ஆஸ்திரேலியாவின் மாத்யூ எப்டன் இணை, ஃபின்லாந்தின் **Emil Ruusuvuori** – ஹங்கேரியின் **Marton Fucsovics** இணையை எதிர்கொள்கிறது.

இதேபோல் யூகி பாம்ரி – பிரான்சில் **Albano Olivetti** இணை – ரஷ்யாவின் **Roman Safiullin –** ஆஸ்திரேலியாவின் **John Peers** இணையை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் - ரஷ்யாவின் **Karen Khachanov**-விடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

---------------

உஸ்பெகிஸ்தானுக்கு எதிரான இரண்டு நட்புணர்வு மகளிர் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான 23 கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது போட்டி வரும் 31-ஆம் தேதியும், இரண்டாவது போட்டி அடுத்த மாதம் 4-ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

-----------------

சிங்கப்பூர் ஓபன் பேட்மிட்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இந்தியா சார்பில் பி.வி. சிந்து, ஹெச்.எஸ். பிரனாய், லக்ஷயா சென், ஸ்ரீகாந்த், பிரியன்ஷு ரஜாவத் ஆகியோர் இப்போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - ஷிராக் ஷெட்டி இணையும் பங்கேற்க உள்ளது.

-----------------

உலக பாரா தடகள சாம்பியன் போட்டிகளில் இந்திய வீரர் - வீராங்கனைகளின் பங்களிப்பு மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வளைதலத்தில் இதைப் பதிவிட்டுள்ள அவர், கடந்த 7 ஆண்டுகளில் 34வது இடத்தில் இருந்து 6வது இடத்திற்கு முன்னேறி இருப்பதுடன், 17 பதக்கங்களை வென்றிருப்பது பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

**<<<<The End>>>>**